# நுவரேலியா பிரதேச சபை
# நுவரேலியா மாவட்டம்

------------------------------------------

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 27 அன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 23 அன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஜுன் 12 அன்றும் சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் காரணமாக, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அம்பகமுவ பிரதேச சபின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தை என்னால் வெளியிட முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 46,098,864 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,857,273 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 14,629,985 ஆகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையினது 24 ஆம் விதிக்கமைய, சேகரிக்கப்படும் பணம் யாவும் நாளாந்தம் வங்கியிலிடப்பட வேண்டும். எனினும், கந்தபொல உப அலுவலகம் சேகரித்த ரூபா 49,934 மற்றும் நானுஓயா உப அலுவலகம் சேகரித்த ரூபா 78,580 என்பன வங்கியிலிடப்படாது ஏறக்குறைய 4 மாதங்களாகக் தேங்கியிருந்தன.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டின் பொருட்டுத் தலைவர் சமர்ப்பித்த மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 4,025 | 4,075 | 4,491 |
| (ii) | குத்தகை வாடகை | 5,318 | 4,733 | 657 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,715 | 2,821 | - |
| (iv) | பிற வருவாய் | 25,832 | 18,907 | 2,356 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் பிற அதிகாரிகளிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 3,343,165 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,057,333 |

### 2.3.3 வாகனத் தரிப்பிடக் கட்டணம்

----------------------------------------------------

ஹக்கல பூந்தோட்டத்திற்கு அருகே வாகனத் தரிப்பிடக் கட்டணத்தை அறவிடுவதற்காக உப சட்ட விதிகள் தயாரிக்கப்படவில்லை. 2012 ஆம் ஆண்டிற்கான குத்தகை உரிமை ஒரு நபரது வேண்டுகோளுக்கிணங்க கேள்வி கோரப்படாது ரூபா 316,968 க்கு வழங்கப்பட்டிருந்தது. 2012 பெப்ரவரி 22 ஆந் திகதி அன்றும் குத்தகையாளருடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்படாதிருந்தது.

### 2.4 போதிய அதிகாரத்துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------------------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 19(1)(i) உப பிரிவு மற்றும் மத்திய மாகாணசபை நிதிசார் விதிக் கோவையினது 48(1) அம் விதிக்கு முரணாக, தலைமைச் செயலாளரதும் உள்ளூராட்சி ஆணையாளரதும் அங்கீகாரமின்றி 10 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 2008 தொடக்கம் 2011 டிசெம்பர் 31 வரை ரூபா 9,743,144 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

### 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

-------------------------------------------------------------

நானுஓயா உப அலுவலகத்தில் உள்ள வருவாய் பரிசோதகர் 2010 ஜனவரி தொடக்கம் 2011 ஜுன் 30 வரையிலான 1 ஆண்டு 6 மாதகாலத்தில் 42 நாட்கள் லீவு எதுவுமின்றி வேலைக்குச் சமுகமளிக்காதிருந்தார். இலங்கைக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் V பிரிவு 7 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.6 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------------

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.